மானால் நம்முடைய தமிழ் நாட்டிலும் இத்தகைய பரிந்துரையைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே மிகவும் பின் தங்கியோர் பட்டியலில் அதிக வகுப்பினரைச் சேர்த்திருப்பதாக ஒரு குறைபாடு இருக்கிறது. இப்படி சேர்த்துக் கொண்டே போனால் அவர்கள் கிளர்ச்சி நடத்துவார்கள். எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களும் அதை ஆதரிப்பார்கள்.

தேசிய படிப்புதவித் தொகை.

*6604 **திரு. எஸ். டி. உகம்சந்த்** :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

National Merit Scholarship வாங்குவதற்கு உள்ள வருமான வரம்பை உயர்த்த மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கப்பட்டுள்ள முறை காரணமாக இந்த விடை இல்லை என்று அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்பட்டாலுங்கூட, மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா என்பதற்கு பதில் மாநில அரசுக்கு மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதா என்று இருக்குமானால், வேண்டுகோள் விடுத்து அது ஏற்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தமிழக அரசுக்கு வருமான வரம்பை உயர்த்த வேண்டும் என்ற குறிப்பை அனுப்பியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அந்த வருமான உயர்வு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அத்தோடு மட்டும் அல்லாமல் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்காக இந்த மாநிலத்தில் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர் இன்றைக்கு உயர் கல்வியை அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த தேசிய மாணவர்கள் உதவித் தொகைத் திட்டம் என்பது, படிப்பு உதவித் தொகை வழங்குவது என்பது முத

1990 ஏப்ரல் 16]

லில் 6,000 ரூபாய் வருமான உச்ச வரம்பு உள்ளவர்களுக்கு வழங்கலாம் என்று 1960–61 முதல் 1988 வரை அந்த திட்டம் இருந்தது, பிறகு 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டு அதற்குப் பிறகு மத்திய அரசு 25 ஆயிரம் வருமான உச்ச வரம்பு என்று உயர்த்தி அது 1988–89 முதல் மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இப்போது நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறது. 1989–90-வது ஆண்டில் 2,100 மாணவர்களுக்கு அந்த உதவித் திட்டத்தின்படி உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை பணம் எவ்வளவு வழங்கப்படுகிறது? இதை உயர்த்துவதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த திட்டத்தில் ஏறத்தாழ 53 லட்சம் ரூபாய் வரையில் மாநில அரசே செலவிட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. 53 லட்சத்திற்குமேல் செலவிடுகிற தொகையைத் தான் மத்திய அரசு தரக்கூடும். எனவே இந்தத் திட்டத்தில் 53 லட்சம் நாம் செலவிட்டுவிட்டு அதற்கு மேல் 5 லட்சம் 10 லட்சம் என்று வந்தால் அதை மட்டும் மத்திய அரசிடத்திலே கேட்க வேண்டிய நிலையில் இந்த உதவித் தொகையை உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்பது மாநில அரசே செய்ய வேண்டிய ஒரு காரியமாக ஆகிவிடும். எனவே அப்படி கேட்கப் படுகிற வாய்ப்பு இப்போது இல்லை. பிளஸ் 2 படிக்கிற மாணவர்களுக்கு வீட்டிலிருந்து படிப்பதற்கு மாதம் 60 ரூபாய், விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு மட்டும் 100 ரூபாய் மாதம்; பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கு முதல் ஆண்டு 60 ரூபாய், விடுதியில் தங்கினால் 100 ரூபாய், 2-வது, 3-வது ஆண்டுகளில் படிப்பவர்களுக்கு மாதம் உதவித் தொகை 90 ரூபாய், விடுதியிலே தங்கினால் 140 ரூபாய். பட்ட மேற்படிப்பு படிப்பவர்களுக்கு வீட்டிலே என்றால் 120 ரூபாய், விடுதியிலே தங்கினால் 300 ரூபாய். தொழில் கல்வி மற்றும் மருத்துவப் படிப்புக்கும் இதே விகிதத்தில் வீட்டிலே இருந்து படித்தால் மாதம் 120 ரூ., விடுதியிலே தங்கி படித்தால் 300 ரூபாய் என்று தேசிய படிப்பு உதவித் திட்டத்தின் அடிப்படையில் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேஷனல் மெரிட்ஸ் ஸ்காலர்ஷிப் மூலமாக கடந்த ஆண்டு நம்முடைய தமிழ்நாட்டிலே பயன்பெற்ற மாணவ மாணவிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், முன்னேறிய

வகுப்பினைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்ற தகவலை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : சுருக்கமாகச் சொன்னால், ''தர முடியாது'' என்று நான் சொல்ல முடியும். ஆனால் இந்த தேசிய உதவித் திட்டம் என்ற அடிப்படையில் அதிக எண்கள் பெருகிறவர்களுக்கு வழங்குவது என்ற அந்தக் கண்ணோட்டத்தில் வழங்கப்படுகிற காரணத்தால் இந்தப் பிரச்சினை இதிலே எழுவது இல்லை. அந்த அடிப்படையில் புள்ளி விவரம் தருவதும் இல்லை.

விருத்தாசலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள்

*1636 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்தில் சப்கோர்ட், முன்சீப் கோர்ட், மாஜிஸ்ட்ரேட் கோர்ட் முதலியவற்றில் ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டிடங்கள் கட்ட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எப்போது கட்டி முடிக்கப்படும்?

9-20 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலத்தில் ரூ. 36.60 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டும் திட்டத்தினை படிப்படியாக நிறைவேற்ற 14–7–1987 நாளிட்ட உள்துறை, அரசு ஆணை எண். 1721-ல் ஒப்புதல் அளிக்கப்பட டது. 14–3–1990 வரை ரூ. 34,60,140 செலவு செய்யப்பட்டுள்ளது. 1989–90-க்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ. 16.70 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு, கட்டிடத்தில் குடிநீர் வசதி, மின் வசதி மற்றும் கழிவு நீர் வசதிகள் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இந்த ஒதுக்கீட்டில் வக்கீல்கள், குமாஸ்தாக்கள், கட்சிக்காரர்கள் தங்குவதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? சைக்கிள்